ஓவியம்: சுந்தர முருகேசன்

வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கான ஒரு வழிமுறைதான் வரலாற்று ஆய்வு

வானவில் அரங்கம்

ஆ.இரா.வேங்கடாசலபதி நேர்காணல்

முகம்மது ரியாஸ்

வரலாறு என்பது மறைந்துபோன ஆளுமைகளைத் தோண்டி எடுத்துத் தூக்கில் போடுவதோ, அல்லது அவர்களைத் திருவுருக்களாக மாற்றுவதோ அல்ல. கடந்த காலத்தில் நிகழ்ந்த பிழைகளுக்கு இன்று பழிவாங்குவதற்கு வரலாறு ஒரு கத்தி அல்ல!

தன் பள்ளிப் பருவத்திலிருந்தே ஆ.இரா.வேங்கடாசலபதிக்கு வ.உ.சி. மேல் பெரிய ஈர்ப்பு. வ.உ.சி.யின் கடிதங்களைத் தேடித் தொகுத்துப் புத்தகமாகக் கொண்டுவந்தபோது, அவருக்கு வயது 17. வ.உ.சி. மீதான அவரது ஆய்வு தமிழ்ச் சமூகம், தமிழ்ப் பண்பாடு சார்ந்த ஆய்வுக்கு இட்டுச்சென்றது. 19–ம் நூற்றாண்டு தொடங்கி 20–ம் நூற்றாண்டின் பாதி வரையிலான தமிழ்ச் சூழல்தான் சலபதியின் ஆய்வுக் களம். வ.உ.சி, பாரதி, புதுமைப்பித்தன், உ.வே.சா, எஸ்.ஜி.இராமாநுஜலு நாயுடு, ஏ.கே.செட்டியார் என, சென்ற நூற்றாண்டின் தமிழ் ஆளுமைகளின் பரிமாணங்களை ஆவணப்படுத்தியுள்ளார். 'அந்தக் காலத்தில் காப்பி இல்லை', 'ஆஷ் அடிச்சுவட்டில்,' 'வ.உ.சி.யும் காந்தியும்: 347 ரூபாய் 12 அணா', 'Who Owns That Song?: the Battle for Subramania Bharati's Copyright' உட்பட தமிழிலும் ஆங்கிலத்திலுமாக இதுவரையில் 40–க்கும் மேற்பட்ட புத்தகங்களை அவர் எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். தமிழ் வரலாறு, இலக்கியம், பண்பாடு, மொழிபெயர்ப்பு எனப் பல தளங்களில் சலபதி வழங்கியிருக்கும் பங்களிப்புக்காக அவருக்கு, 2021–ம் ஆண்டுக்கான வாழ்நாள் சாதனையாளருக்கான 'இயல்' விருதைகனடாதமிழ்இலக்கியத்தோட்டம்அறிவித்திருக்கிறது. இத்தருணத்தில் அவருடன் உரையாடியதிலிருந்து...

கடந்த 40 ஆண்டுகளாக வரலாற்று ஆய்வில் ஈடுபட்டுவருகிறீர்கள். இந்தப் பயணம் வழியாக நீங்கள் வந்தடைந்திருக்கும் புள்ளி என்ன?

வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் பதிவு என்ற எளிய புரிதல் சமூகத்தில் நிலவுகிறது. உண்மையில், வரலாற்று ஆய்வை அதன் விரிந்த பொருளில் வாழ்க்கையைப் பற்றிய விசாரணை என்பதாகவே பார்க்க வேண்டும். நிகழ்காலச் சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கான, அதனைக் கேள்விக்கு உட்படுத்துவதற்கான, பகுத்தாய்வதற்கான ஒரு வழிமுறைதான் வரலாற்று ஆய்வு. அது ஒரு தனித்த அறிவுப்புலம். அதற்கான நெறிமுறைகளும் முறையியலும் உண்டு. அவற்றைக் கைக்கொண்டே இந்த விசாரணையை நிகழ்த்த முடியும். நாம் வாழும் சமூகத்தை மேம்பட்டதாக ஆக்குவதற்கான முதல் படி இது.

சமூக மாற்றத்தைக் காலவரிசையில் புரிந்துகொள்ள முயல்வதே வரலாற்று ஆய்வு என்றும் சொல்லலாம். ஆனால், சமூக மாற்றம் என்பது சிக்கலானது; எளிதில் மொழிக்குள் வசப்படாதது. இருப்பினும், அதன் அசைவியக்கத்தைத் தொடர்ந்து புரிந்துகொள்ள முயற்சி செய்கிறோம். நாம் வந்தடையும் முடிவு, காலத்துக்குக் காலம் மாறும். எனவே, அந்தப் பரிசீலனையை ஒவ்வொரு தலைமுறையும் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுகிற சமூகம், பண்பாட்டு வறுமைப்பட்ட சமூகமாகவே இருக்க முடியும்.

வரலாறு என்பது மறைந்துபோன ஆளுமைகளைத் தோண்டி எடுத்துத் தூக்கில் போடுவதோ, அல்லது அவர்களைத் திருவுருக்களாக மாற்றுவதோ அல்ல. கடந்த காலத்தில் நிகழ்ந்த பிழைகளுக்கு இன்று பழிவாங்குவதற்கு வரலாறு ஒரு கத்தி அல்ல. அனைத்துப் பிரிவு மக்களையும் உள்ளடக்கிய, ஆரோக்கியமான ஒரு சமூகத்துக்கு வரலாறு ஒரு முன்தேவை.

ஒரு ஆய்வு எப்படித் தொடங்குகிறது, எப்படி விரிகிறது, அதற்கான உங்களின் உழைப்பு என்ன என்பன பற்றியெல்லாம் பகிர்ந்துகொள்ள முடியுமா?

நான் திட்டமிட்டு வரலாற்று ஆய்வாளனாக ஆகவில்லை. சிறுவனாக இருந்தபோது வ.உ.சி. மேல் பெரிய ஈடுபாடு ஏற்பட்டது. கப்பல் ஒட்டிப் பெரிய சாதனையைப் புரிந்த ஒரு பேராளுமையைப் பற்றி ஆவணபூர்வமான, விரிவான வரலாறு இல்லாதது அதிர்ச்சியாக இருந்தது. அந்த இடைவெளியை நாம் ஏன் சரிசெய்யக் கூடாது என்று தோன்றியது. இப்படியாகத்தான் வரலாற்று ஆய்வுக்குள் நுழைந்தேன்.

வ.உ.சி.யை மட்டுமே ஆராய்ந்தால் வ.உ.சி.யைப் புரிந்துகொள்ள முடியாது என்பதை உணர்ந்தேன். தேசிய இயக்கம் மட்டுமல்லாமல், தொழிற்சங்க இயக்கம், திராவிட இயக்கம், தமிழ் மறுமலர்ச்சி இயக்கம், சைவச் சீர்திருத்த இயக்கம் எனத் தம் காலத்து இயக்கங்கள் எல்லாவற்றிலும் வ.உ.சி. பங்காற்றியிருந்தார். அதைப் புரிந்துகொள்ளும் முயற்சியில்தான் நான் வரலாற்று ஆய்வாளனானேன். இந்த ஆராய்ச்சி பாரதி, புதுமைப்பித்தன், பெரியார், உ.வே.சாமிநாதர் என்று எங்கெங்கோ என்னை இட்டுச்சென்றுள்ளது.

ஒரு ஆய்வைத் தொடங்கும்போது, அது குறித்து நீங்கள் கொண்டிருக்கும் பார்வை, அந்த ஆய்வு முடியும்போது நேரெதிர் திசையில் மாற்றம் அடைந்திருக்கிறதா?

முன்முடிவுகளோடு எழுதப்படுவது வரலாறாக இருக்க முடியாது. ஓர் ஆய்வுக் கேள்வியை, ஒரு கருதுகோளை முன்வைத்துத் தரவுகளைத் திரட்டும்போது, அந்தத் தேடல் எங்கெங்கோ இட்டுச்செல்லும், இழுத்துச்செல்லும். அதற்கெல்லாம் இடம் கொடுக்கும் அதே வேளையில், ஆய்வுக் குதிரையின் லகானையும் விட்டுவிடக் கூடாது. ஓர் ஆய்வுரையை எழுதி முடிக்கும் வேளையில், மேலும் நாலைந்து ஆய்வு முயற்சிகள் உங்கள் மேசையில் இல்லை என்றால், நீங்கள் செய்த ஆராய்ச்சியில் ஏதோ கோளாறு என்று முடிவு செய்துகொள்ளலாம்.

தரவுகளைத் தேடும்போது ஏற்படும் திருப்பங்கள் ஒருபுறமிருக்க, எழுதும்போது நிகழ்பவை தனி வகை. எடுத்துக்காட்டாக, பாரதியின் நூல்கள் நாட்டுடைமையான வரலாற்றை எழுத ஆரம்பித்த வரையிலும், பாரதியின் தம்பி சி.விசுவநாதன் பற்றிப் பலரைப் போலவே எனக்கும் எதிர்மறையான பார்வைதான் இருந்தது. ஆனால், புத்தகத்தை முடித்தபோது அவர் அவலநாயகராக மாறிவிட்டிருந்தார்; அவர்மீது என்னையும் அறியாமல் அனுதாபம் ஏற்பட்டுவிட்டிருந்தது. இப்படிப் பல உதாரணங்கள். ஒருவகையில், வரலாற்று ஆய்வு என்பது ஒரு சிலிர்ப்பூட்டும் அனுபவம்தான்.

தமிழ்நாட்டில் பொதுச் சமூகத்துக்கும் கல்விப்புல ஆய்வு மொழிக்குமான இடைவெளி ஏன் இன்னும் கடக்கப்படவில்லை?

மேலைநாடுகளில், வரலாறு, அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம் என எந்தத் துறையாக இருக்கட்டும், மக்களுக்காக எழுதுவது என்பது ஒரு பெரிய மரபாக இருந்திருக்கிறது. பெரிய வரலாற்று ஆய்வாளர்கள் எல்லாம் மக்களுக்காக எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய புத்தகங்களில் கல்விப்புலத்துக்குத் தேவையான எல்லா நெறிமுறைகளும் இருக்கும். அதேசமயம், பொது வாசகர்களும் அந்தப் புத்தகத்தைப் படிக்க முடியும்.

இந்தியாவில் கல்விப்புலம் பொதுச் சமூகத்திலிருந்து அந்நியப்பட்டிருக்கிறது. ஆய்வு என்பது வெறும் வேலைக்கான வழிமுறையாக அணுகப்படுகிறது. விளைவாக, பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வு என்பது சமூகத்துக்குச் சம்பந்தமே இல்லாததாக இருக்கிறது. பிறகு எப்படி, கல்விப்புல ஆய்வுகளில் பொதுச் சமூகத்தோடு உரையாடும் மொழி வெளிப்படும்?

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தொழில்நுட்பக் கல்விக்கும் மருத்துவக் கல்விக்கும் தரப்படும் முக்கியத்துவம் சமூக அறிவியலுக்கு இல்லை. மதிப்பெண் குறைந்த மாணவர்கள் படிக்கும் பாடமாக வரலாற்றை மாற்றிவிட்டார்கள். சமூகவியலையும் அரசியல் அறிவியலையும் மானுடவியலையும் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் எத்தனை இருக்கின்றன? தத்துவம் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

தமிழில் நடக்கும் காத்திரமான அறிவுசார் விவாதங்கள் கல்வி நிறுவனங்களுக்கு வெளியேதான் பெரிதும் நடைபெறுகின்றன... என்ன செய்வது?

தற்போது எழுதிக்கொண்டிருக்கும் புத்தகம் பற்றிப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

தமிழகத்தைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதுபவர்கள் பெரிதும் அயல்நாட்டினராகவே உள்ளனர். தமிழ்ப் பார்வையோடு ஆங்கிலத்தில் எழுத வேண்டிய தேவை உள்ளது. அண்மைக் காலத்தில் இதில் நான் கூடுதல் கவனம் செலுத்திவருகிறேன். அவ்வகையில் பெரியார் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதும் பணி தொடர்கிறது. வ.உ.சி. வாழ்க்கை வரலாற்றின் முதல் பகுதியையும் எழுதிவருகிறேன். இது தமிழிலும் ஆங்கிலத்திலுமாக அமையும்.

- முகம்மது ரியாஸ்,
தொடர்புக்கு: riyas.ma@hindutamil.co.in

நடுப்பக்கக் கட்டுரைகளை ஒலிவடிவில் கேட்க...

மெலட்டூர் பாகவத மேளாவில் ஏழு நாள் உலா!

▲ வள்ளித் திருமணம்

ஆசை

தஞ்சாவூருக்கு அருகில் இருக்கிறது மெலட்டூர். ஊரின் பெயரைச் சொன்னாலே பாகவத மேளா மட்டும்தான் எல்லோருக்கும் நினைவுக்கு வரும். அதுவே அந்த ஊரின் அடையாளமாக ஆகியிருக்கிறது. பாகவத மேளா என்பது பழமையான நாட்டிய நாடக வகையைச் சேர்ந்தது. விஜயநகர சாம்ராஜ்ஜியத்தின் சரிவுக்குப் பிறகு ஆந்திரத்திலிருந்து 16–ம் நூற்றாண்டில் தஞ்சாவூருக்கு வந்த 500–க்கும் மேற்பட்டோர் இங்கேயே உருவாக்கி வளர்த்தெடுத்த கலை. இதில் தமிழ் மண்ணின் தொல்கலையின் தடங்களைக் காணலாம். தஞ்சாவூருக்கு வந்தவர்களில் பெரும்பாலானோர் இசைக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், கவிஞர்கள். அப்போது தஞ்சையை ஆண்ட அச்சுதப்ப நாயக்கர் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடு, மாடுகள், நிலங்கள் கொடுக்கப்பட்டன. மெலட்டூரில் பல கலைஞர்கள், அறிஞர்கள் இருந்திருக்கிறார்கள். பரதம் காசிநாதையா, பரதம் வீரபத்ரய்யா என்று பலரையும் சொல்லலாம்.

பாகவத மேளா ஒரு பக்தி மார்க்கமாகவே உருவாகி, தொடர்ந்துகொண்டிருக்கிறது. பாகவதர்கள் சூத்ரதாரியாக இருந்து நடத்தியதால் இதற்கு பாகவத மேளா என்ற பெயர் வந்தது. சாலியமங்கலம், சூலமங்கலம், ஊத்துக்காடு, தேப்பெருமாநல்லூர், மெலட்டூர் போன்ற ஊர்களில் பாகவத மேளா நடத்தப்பட்டுவந்தாலும் இப்போது சூலமங்கலத்திலும் ஊத்துக்காட்டிலும் நடைபெறுவதில்லை. மன்னார்குடியில் கூட பாகவத மேளா நடைபெற்றது தொடர்பான குறிப்புகள் தஞ்சையின் மோடி ஆவணங்களில் இருப்பதாக அய்யம்பேட்டையைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளரான என்.செல்வராஜ் குறிப்பிடுகிறார். மெலட்டூர் பாகவத மேளாதான் மிகவும் புகழ்பெற்றது. பாகவத மேளா நாடகங்கள் முழுவதும் தெலுங்கில்தான் நடக்கும். பெரும்பாலும் உள்ளூர்க் கலைஞர்கள்தான் இவற்றில் பங்குகொள்வார்கள். மெலட்டூர் பாகவத மேளா நாடகங்களை எழுதியவர் வேங்கடராம சாஸ்திரிகள் (1770–1830). தன் கிராமத்தைச் சேர்ந்த பலரை ஒன்றுசேர்த்து இந்த நாடகங்களை அவர் நடத்தியிருக்கிறார். அதற்குப் பிறகு பரதம் நடேசய்யர் நடத்திவந்திருக்கிறார். 1932–ல் நடேசய்யர் காலமான பிறகு இந்த நாடகம் நின்றுவிட்டது. சடங்குகள் மட்டும் தொடர்ந்தன. மெலட்டூர் வி. கணேச ஐயர் 'மெலட்டூர் ஸ்ரீலட்சுமி நரசிம்ம ஜெயந்தி பாகவத மேளா நாட்டிய நாடக சங்கம்' என்ற அமைப்பை, நடேசய்யரின் சீடர்கள் அனைவரையும் சேர்த்து உருவாக்கினார். இரண்டு ஆண்டுகள் 25 கலைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து 1941–ல் வரதராஜபெருமாள் கோயில் முன்பு 'பிரகலாதா சரித்திரம்' என்ற நாட்டிய நாடகத்தை அரங்கேற்றினார். அன்று தொடங்கி இந்த ஆண்டு வரை கடந்த 82 ஆண்டுகளாக, இடையில் கரோனா காரணமாக இரண்டு ஆண்டுகள் தடைப்பட்டதைத் தவிர, தொடர்ச்சியாக இங்கே பாகவத மேளா நடந்துவருகிறது. இந்த ஆண்டு கடந்த மே மாதம் 20–ம் தேதி தொடங்கி 26–ம் தேதி வரை 7 நாட்கள் பாகவத மேளா நடைபெற்றது.

பிரகலாதன் சரித்திரம், ஹரிச்சந்திரா (இரண்டு நாட்கள்), சீதா பரிணயம், வள்ளித் திருமணம் ஆகிய நாடகங்கள் இந்த ஆண்டு அரங்கேற்றப்பட்டன. இவற்றில் வள்ளித் திருமணம் மட்டும் தமிழ் நாடகம். பாகவத மேளா நாடகங்கள் தவிர தென்னகத்தின் முக்கியமான குச்சுப்புடி, பரதம், மோகினியாட்டக் கலைஞர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

▲ பிரகலாதன் சரித்திரம்

▲ அலேக்கியா புஞ்சாலா குழுவினரின் குச்சுப்புடி

▲ இரணியகசிபுவாக குமார்

எல்லா நாடகங்களிலும் முதலில் கோணங்கி அறிமுகமும் அடுத்தது பிள்ளையாரும். கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றாகப் பாடலுடனும் நடனத்துடனும் அறிமுகப்படுத்தப்படுவார்கள். பிறகுதான் கதை ஆரம்பிக்கும். பாடல்களுக்கும் நடனத்துக்கும் இடையே கொஞ்சம் வசனத்துடன் கதை நகரும். ஆண் பாத்திரங்கள், பெண் பாத்திரங்கள் இரண்டிலும் ஆண்களேதான் நடிக்கிறார்கள்.

பிரகலாதன் சரித்திரம் நாடகம்தான் முதலாவது. அற்புதமான, உக்கிரமான அனுபவத்தைத் தந்த நாடகம் அது. பிரகலாதனாக நடித்த 10 வயது சுதர்சனனுக்கு இதுதான் முதல் ஆண்டு. மழலை மாறாத குரலில் தெலுங்கில் வசனத்தைப் பாடும்போது மேடை ஓரத்தில் அமர்ந்திருக்கும் தேர்ந்த இசைக் கலைஞர்களும் பார்வையாளர்களும் 'ஆஹா ஆஹா' என்று மெய்மறந்து ஓசையெழுப்பினார்கள். ஹரி புகழைப் பாடிக்கொண்டிருந்த பிரகலாதனுக்கு போதனை தந்து தனது புகழ் பாடச் செய்வதற்காக இரணியகசிபு (குமார்) முயற்சிசெய்யும்போது சில சமயம் கோபத்துடன் விழிகளை உருட்டுகிறார்; சில சமயம் கெஞ்சியும் கொஞ்சியும் பார்க்கிறார். தனது தொடையில் உட்கார வைத்துக் குழந்தைக்கு புத்திமதி சொல்கிறார். அப்போது குழந்தை வசனத்தை மறந்துவிட இரணியகசிபுவே ஹரியின் புகழைப் பாடும் வசனத்தைக் குழந்தைக்குச் சொல்லிக்கொடுத்து, அதை உள்வாங்கிக் குழந்தை சொன்னபோது அரங்கமே குபீரென்று சிரித்துவிட்டது. அவ்வளவு அழகிய தருணம் அது! 'ஹரி நரசிம்மராக அவதாரம் எடுப்பதற்கு முன்பே தனது வெற்றியைக் குழந்தையின் மறதி மூலம் நிலைநாட்டிவிட்டான்' என்றார் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெரியவர். இரவு 10 மணிக்குத் தொடங்கிய நாடகம் மறுநாள் காலை 5.30–க்குத்தான் முடிந்தது. இறுதிக் கட்டம் உக்கிரமும் உணர்ச்சிகளும் பொங்கும் தனி நாடகம். நரசிம்மர் வேடமிட்டவரை (கணேஷ்) தூண் போன்ற அமைப்புக்குள் கொண்டுசென்றவுடன் நரசிம்மராக ஆகிவிட்டார். இரணியகசிபு பிரகலாதனை அழைத்துக்கொண்டு மேடையிலிருந்து கீழே இறங்கிவிட்டார். தூக்கம், அயர்ச்சி எதுவும் இல்லாமல் ஒட்டுமொத்தப் பார்வையாளர்களும் உறைந்துபோயிருந்தார்கள். பார்வையில்தான் அவர்களின் இதயம் துடித்துக்கொண்டிருந்தது. நரசிம்மர் வெளிவருகிறார். 8 பேர் சேர்ந்து நரசிம்மரைப் பிடித்துக்கொள்கிறார்கள். இரணியகசிபையும் பிடித்துக்கொள்கிறார்கள். மாறிமாறி இருவருக்கும் வாக்குவாதம் அனல்பறக்கிறது. ஒரு கட்டத்தில் இரணியகசிபு மயங்கிவிழ அவருடைய வாளை எடுத்து மேடையில் உள்ள நரசிம்மரிடம் கொடுத்து, வதம் நிறைவுபெற்றது என்று உணர்த்துகிறார்கள். இந்த இரண்டு பாத்திரங்களையும் பற்றி பேராசிரியர் தங்க.ஜெயராமனிடம் பிறகு கேட்டபோது "எல்லோரும் நல்ல நடிப்பைப் பற்றிச் சொல்லும்போது பாத்திரத்தோடு நடிகர் ஒன்றிப்போய்விட்டார் என்று சொல்வார்கள். இங்கே அப்படியில்லை. நரசிம்மராக வருபவர் தன்னை நரசிம்மர் என்றும் இரணியகசிபுவாக வருபவர் தன்னை இரணியகசிபு என்றும் இயல்பாகவே நம்பிவிடுவார்கள். மக்களும் அந்த நேரத்தில் அப்படித்தான் நினைப்பார்கள்" என்றார்.

ஹரிச்சந்திரா நாடகம் இரண்டு இரவுகள் நடைபெற்றது. நாடிழந்து, கணவன், மகனைப் பிரிந்து வீட்டு வேலை செய்யும் சந்திரமதியாக நடித்த பரதக் கலைஞர் ஸ்ரீகாந்த் ஒவ்வொரு வேலைக்கும் அவ்வளவு நளினமூட்டியிருப்பார். துணி துவைப்பது, சாணியை உருட்டி சுவரில் அடித்து வறட்டி தட்டுவது, ஒட்டடை அடிப்பது என்று எல்லாவற்றையும் பரதத்தில் கொண்டுவர முடியுமா என்று அதிசயிக்க வைக்கிறார். சீதா பரிணயம் நாடகம் கவித்துவம் மிளிரும் நாடகம்.

கடைசி நாள் வள்ளித் திருமணம் தமிழில் நடைபெற்றது. மற்ற நாடகங்களைவிட இதற்குத்தான் கூட்டம் அதிகம். அதுவரை தெலுங்குக் கீர்த்தனைகளைப் பாடிய இசைக் கலைஞர்கள் வள்ளித் திருமணத்தில் குறவஞ்சிப் பாடல் உள்ளிட்ட துள்ளலான பாடல்களைப் பாடிக் கூட்டத்தைக் கட்டிப்போட்டார்கள். பிரகலாதன் சரித்திரத்தில் பரதம் ஆடிய பிரசன்னா வள்ளித் திருமணத்தில் குறவஞ்சி நடனம் ஆடியது பார்ப்பதற்கு அவ்வளவு குதூகலமாக இருந்தது. விஜய், அரவிந்த் உள்ளிட்ட மூத்த கலைஞர்களும் இசைக்கலைஞர்கள், ஒப்பனைக் கலைஞர்கள் எல்லோரும் இந்த பாகவத மேளாவுக்குப் பெரும் பலம்.

மெலட்டூரில் இன்னொரு குழுவும் பாகவத மேளா நாடகம் நடத்துகிறது. அந்த அமைப்பின் தலைவர் மகாலிங்கம் எனும் மாலி. நாம் செல்வதற்கு முன்பே அந்தக் குழுவினரின் பாகவத மேளா முடிந்துவிட்டது. நாம் பார்த்த பாகவத மேளாவை நடத்திய 'மெலட்டூர் பாகவத மேளா நாட்டிய நாடக சங்க'த்தின் தற்போதைய தலைவர் குமாரிடம் பேசினேன். "எங்கள் தாத்தா கணேச ஐயர் 1941–ல் மெலட்டூர் பாகவத மேளாவுக்குப் புத்துயிர் கொடுத்தார். தாத்தா, அப்பா இருவரும் இந்தக் கலை அழிந்துபோய்விடக் கூடாது என்பதற்காக சொத்தையே விற்றவர்கள். எங்கள் தாத்தா கிட்டத்தட்ட 40 ஏக்கர் நிலத்தை விற்றிருக்கிறார். அவருக்குப் பிறகு என் அப்பா தான் நடத்திய மளிகைக் கடையை இந்தக் கலைக்காக விற்றிருக்கிறார். அவருக்குக் கலைமாமணி விருதுடன் கிடைத்த தங்கக் காசையும் ஒரே வாரத்தில் இந்தக் கலைக்காக விற்றுவிட்டார். அப்பாவுக்குப் பிறகு எனது அண்ணன் நடராஜன் இந்தக் கலையை ஒரு உயர்ந்த நிலைக்குக் கொண்டுசென்றார். கடந்த ஆண்டு மறைந்துவிட்டார். கரோனா காரணமாக இடையில் இரண்டு ஆண்டுகள் பாகவத மேளாவை நடத்த முடியவில்லை. தற்போது மீண்டும் தொடங்கியதில் பெருமகிழ்ச்சி. பாகவத மேளாவை நாங்கள் கலையாக மட்டும் நினைக்கவில்லை. இது ஒரு பக்தி மார்க்கம். எங்கள் தாத்தா இறப்புக்கு முன் எங்களிடம் ஒரு சத்தியப் பிரமாணம் வாங்கினார். 'என்னுடைய ஐந்து பேரன்களும் உயிருடன் இருக்கும் வரை இந்தக் கலையை நரசிம்ம சுவாமிக்காகத் தொடர்ந்து நடத்த வேண்டும்' என்றார். அந்த சத்தியப் பிரமாணம்தான் இந்தக் கலை இவ்வளவு காலம் நீடிப்பதற்குக் காரணம்" என்கிறார் குமார்.

▲ கலைச்செல்வி, படம்: ஆசை

கலைகளைப் பொறுத்தவரை சமூகத்தின் மேல்தட்டு மக்களுக்கும் கீழ்த்தட்டில் இருப்பவர்களுக்கும் இடையில் பெரிய இடைவெளி விழுந்திருக்கும் நிலையில் மெலட்டூரில் கலையானது மக்களுடன் இருப்பதைப் பார்க்க முடிகிறது. எளிய பின்னணியைக் கொண்ட மக்கள் பலரும், மொழி புரியவில்லையென்றாலும் விடிய விடிய இந்த நாடகங்களைக் கண்டுகளித்ததைப் பார்க்க முடிந்தது. இஸ்லாமியப் பெண்களும் சிறுமிகளும் தொடர்ந்து எல்லா நாட்களும் இந்த நாடகங்களைப் பார்த்தார்கள். டீக்கடையொன்றில் சந்தித்த கலைச்செல்வி, "மெலட்டூர்னு எங்கே போய் சொன்னாலும் பாகவத மேளா நடக்குமே அந்த ஊரான்னு எல்லாரும் கேக்குறப்ப ரொம்ப பெருமையா இருக்கும். எங்க ரத்தத்தோட ஊறிப்போனது பாகவத மேளா. மார்க்கண்டேயன் நாடகத்துல நடிகரு எமன் வேசம் கட்டி வந்தா 'ஐயோ என்னைக் கூட்டிட்டுப் போயேன்'னு சொல்ல வைக்கும்" என்றார்.

ஏழு நாட்களும் பாகவத மேளாவில் இடம்பெற்ற நாடகங்கள், நடனங்கள் எல்லாம் அன்பு, அகந்தை, கோபம், வாய்மை, ஈகை, உக்கிரம், காதல், குறும்பு என்று மனித மனதின் அத்தனை இயல்புகளின் வெவ்வேறு வெளிப்பாடுகளாக இருந்தன. நாடகீய ஒப்பனை, கண்ணைப் பறிக்கும் உடைகளின் வண்ணங்கள், அவற்றைச் சுமந்துகொண்டிருந்த நடிகர்களின் அளவற்ற நாடகத் தருணங்கள் எல்லாம் மனதை விட்டு நீங்காமல் ரீங்கரித்துக்கொண்டே இருந்தன. மெலட்டூருக்கு விடைகொடுத்துவிட்டு வெட்டாற்றுப் பாலத்தைக் கடக்கும்போது, ஒரு முதியவர் குச்சியை ஊன்றிக்கொண்டு படிக்கட்டுகளில் இறங்கி, குச்சியுடனேயே தண்ணீருக்குள் மூழ்கி மூழ்கி எழுந்தார். அவரையும் எல்லோரையும் என்றும் குளிர்விக்கட்டும் காவிரி!

- ஆசை, தொடர்புக்கு: asaithambi.d@hindutamil.co.in
படங்கள்: Manifotographs